தரமான சுவையான
ஐஸ்கிறீம், குளிர்பானங்கள்
மற்றும்
சிற்றுண்டி வகைகளை
புசித்து இன்புற
ராஜா குளிர்
சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/538)

அக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

ஸ்பெஷல், நட்ஸ், வனிலா
புருட்சலட் ஐஸ்கிறீம், கிறீம்
சர்பத் ஆகியவற்றைச்
சுவைத்து மகிழ்ந்திட
ராஜா குளிர்
சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/538)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 25 வியாழக்கிழமை (08 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 193

உண்மைநிலையை தெளிவுபடுத்தி அறிக்கை

# தேசாபிமான உணர்வுள்ள இளம் சமூகத்தை இயக்கத்தில் இணைய புலிகள் அழைப்பு

## கல்வியா? விடுதலைப் போராட்டமா? மாணவர்களே முடிவு செய்யட்டும்!

யாழ்ப்பாணம், ஜூன் 8

சிங்களப்படைகளின் ஆக்கிரமிப்பிலிருந்து எமது தாய் மண்ணை மீட்கும் — மண் மீட்புப் போரில் = இணைந்து கொள்வது தமது தேசியக் கடமை என எண்ணும் = தேசாபிமான உணர்வுள்ள = அனைத்து இளைஞர்களையும் யுவதிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையுமாறு புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

"கல்வியும் போராட்டமும் பிரிக்க முடியாத இரண்டு அம்சங்களாகிவிட்டன. ஒன்றுக்கு ஒன்று கவசமாக = காப்பரணாக விளங்க வேண்டும். அதேவேளை கல்வியா? போராட்டமா? என்று ஒரு மாணவன் தெரிவு செய்ய முயல்வதை நாம் தடுக்க மாட்டோம்" = என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

தற்போதைய உண்மைச் சூழ்நிலைகளை விளக்கியும், வதந்திச் செய்திகளுக்கு ஆப்பு வைக்கும் வகையிலும் புலிகளின் அரசியல் துறை நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

வடபுலம் மீது ஒரு பாரிய படையெடுப்பைமேற்கொள்ள சிங்கள இராணுவம் தயாராகி வருவதாக உலகச்செய்தி நிறுவனங்கள் அபாய மணி அடித்துள்ளன. இத்தகையதொரு படையெடுப்பை வெற்றிகரமாக நடத்தும் நோக்குடன் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்கேணல் ரத்வத்தையும் முயன்றபடி உள்ளனர்.

ஆயுதக் கொள்வனவுக்கென வெளிநாடுகளுக்குச் சென்ற இராணுவ உயர் அதிகாரிகள் கொழும்பு திரும்பிவிட்டனர். இன்னும் ஒரு சில தினங்களில், கொள்வனவு செய்யப்பட்ட, ஆயுதத் தளபாடங்கள் கொழும்பை வந்தடைந்துவிடும். அவை வடபுலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்

(3 ஆம் பக்கம் பார்க்க)

கட்டுநாயக்க குண்டுவெடிப்பு:

## முக்கிய தகவல்கள் பல கிடைத்து விட்டனவாம்

கொழும்பு, ஜூன். 8

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றிய பல முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து சென்ற, விசேட சி. ஐ. டீ. பிரிவினரும், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளும் தமது பூர்வாங்க விசாரணைகளை முடித்துக் கொண்டுள்ளனர்.

இதன் அடிப்படையில், சந்தேகநபர்களை விரைவில் கைது செய்வது சாத்தியப்பாடுடையது என்ற நம்பிக்கை வெளியிடப்பட்டது.

விசாரணைகளில் இருந்து,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வானின் உரிமையாளரான சிங்களவர் கைதானார்!

கொழும்பு, ஜூன் 8

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் வாகனத் தரிப்பிடத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட வானின் முதலாவது உரிமையாளரான சிங்களவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குண்டு வெடிப்புக்கு பயன்படுத்தப்பட்ட அந்த வான் அண்மையில் தமிழர் ஒருவரால் 4 லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டது எனத் தெரிய வந்துள்ளதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொலைவில் இருந்து இயக்கும் (ரிமோட் கொன்ரோல்) முறையினாலேயே குண்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## தரவைக்குளம் படையினர் முற்றாக வெளியேறினர்

யாழ்ப்பாணம், ஜூன் 8

மட்டக்களப்பு மாவட்டத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தரவைக்குளம் முகாமை முற்றாகக் கைவிட்டு படையினர் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

இதனால் அப்பகுதி இராணுவ அச்சுறுத்தலில் இருந்து விடுபட்டுள்ளது.

தரவைக்குளம் இராணுவ முகாம் கடந்த 27 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டது. அதன் பின்னர் அங்கு சென்று தங்கியிருந்த இராணுத்தினர் காயமடைந்தவர்களையும், தப்பி ஓடியவர்களையும் மீட்டுக் கொண்டு முகாமை முற்றாகக் கைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளனர்.

தரவைக்குளம் முகாம் தாக்குதலில் 40க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டமை தெரிந்ததே. (ஐ-3)

## "நரோமா" சேவையை தொடர்வதில் தடங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 8

திருகோணமலைக்கும், பருத்தித்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டுள்ள "நரோமா" கப்பலின் சேவையை நடத்துவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இக்கப்பல் சேவையில் ஈடுபடக்கூடிய காலம் தொடர்பாக துறைமுக அதிகார சபை வழங்கிய உத்தரவாதம் நாளையுடன் காலாவதியாவதாலும்—

பருத்தித்துறையில் பயணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

உறவினருடனான தொடர்புகள் துண்டிப்பு:

## வடக்கு முகாம்களில் படையினர் மத்தியில் உளவியல் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 8

வடபகுதிக்கான விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருப்பதை அடுத்து முகாம்களில் முடங்கிப் போயுள்ள படையினர் உளவியல் ரீதியாகப் பெரும் பாதிப்புக்கு உட்பட்டுள்ளனர்.

— வடபகுதி இராணுவ உயர்பீட வட்டார நிலைகளை மேற்கோள் காட்டி "ராய்ட்டர்" செய்தி நிறுவனம் இவ்வாறு தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதல்களினால் இரு "அவ்ரோ" விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்னர் வடபகுதிக்கான விமானப் போக்குவரத்து முற்றாக முடங்கியுள்ளது.

முகாம்களை புலிகள் முற்றுகையிட்டிருப்பதால் தரைவழித் தொடர்புகள் எதுவும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யுத்தத்தில் வெற்றியீட்டும் வரை அரசமைப்பு மாற்றம் வேண்டாம்

அரசுக்கு மகாநாயக்க தேரர் யோசனை

கொழும்பு, ஜூன் 8

'விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசு வெற்றியீட்டும் வரை புதிய அரசமைப்பு எதனையும்நடைமுறைக்கு கொண்டுவர வேண்டாம்'

சியாம் மகா நிக்காயவின் மல்வத்த மஹா விகாரையை சேர்ந்த வண ரம்புக்வெல்ல சிறி தர்மகிஸ்த விபசி மகா நாயக்க தேரர் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் கோரமான யுத்தம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இத்தகைய நிலையில், அரசமைப்பில் மாற்றம் ஏற்படுத்துவது பொருத்தமான செயற்பாடு அல்ல.

அரசமைப்பு மாற்றங்கள், சமாதானம் நிலவும் காலத்தில் அறிமுகப்படுத்தப்படுவதே பொருத்தமானதாகும்.

எனது இந்தக் கருத்துடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கே துருப்புகளைக் குறைத்து வடக்கே அனுப்ப அனுருத்த திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

கிழக்கு மாகாணத்தில் தமது இராணுவ நலன்களைக் காப்பாற் போதுமான அளவு துருப்புக்களை மட்டும் வைத்துக்கொண்டு எஞ்சியோரை அங்கிருந்து வடக்குக்கு அனுப்பும் திட்டம் ஒன்றை பாதுகாப்புத் தலைமைப்பீடம் ஆயுதப் படைத் தளபதிகளுக்கு கையளித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்தை தலைமையில் ஆயுதப் படைகளின் உயர் அதிகாரிகள் பங்குபற்றிய கூட்டம் ஒன்று கடந்த வாரம் நடைபெற்றது.

மிக நீண்டகால அவகாசத்துடன் கூடிய இராணுவ நட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன். 8

கிளாலி — பூநகரி படகுச் சேவை மறுஅறிவித்தல் வரை நடைபெறமாட்டாது என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## "சீ-டான்ஸரில்" உயிர் தப்பிய 11 பேரும் நேற்று திருமலை பயணம்

பருத்தித்துறைக்கு வந்து சென்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 8

கடந்த ஞாயிறன்று காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் கடற்கண்ணியில் சிக்கிய 'சீ-டான்ஸர்' கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 11 பேரும் நேற்று மாலை "லங்கா கல்யாணி" கப்பலில் திருமலை பயணமானார்கள்.

கப்பலில் 9 சிப்பந்திகள், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரி ஒருவர் மற்றும் அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி ஆகியோர் இவர்களில் அடங்குவர்.

கப்பலில் இருந்து மீட்கப்பட்ட இவர்கள் 11 பேரும் பலாலியில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காலி வன்செயல் தொடர்பாக சிப்பாய் உட்பட 29 பேர் கைது

கொழும்பு, ஜூன் 8

காலி நகரிலும், எல்பிட்டி பகுதியிலும் அண்மையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இன வன் செயல்களுடன் தொடர்புடைய 29 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி நகரில் நடந்த சம்பவம் தொடர்பாக 16 பேரும், எல்பிட்டி சம்பவம் தொடர்பாக 13பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் கிழக்கில் உள்ள இராணுவ முகாமைச் சேர்ந்தசிப்பாய் ஆவார். என்று எல்பிட்டி பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் அனைவரும் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி இவர்கள் அடையாள அணிவகுப்பு ஒன்றில் நிறுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(4 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை வங்கியின்

## பருத்தித்துறை கிளையை இடம் மாற்ற அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 8

பருத்தித்துறையில் உள்ள இலங்கை வங்கிக் கிளையை தேவைப்படும் பட்சத்தில் வேறு இடத்துக்கு இடம் மாற்றுவதற்கு வங்கியின் கொழும்புத் தலைமையகம் கிளை முகாமையாளருக்கு அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

வங்கியின் பாதுகாப்பு தேவையை முன்னிட்டு— அவசரம் ஏற்படும்போது— வங்கியை இடம் மாற்றவே அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# இலங்கை நிலைவரத்தை இந்தியா மிக உன்னிப்பாக அவதானிக்கிறது

வெளிநாட்டு அமைச்சர் பிரணாப்முகர்ஜி தகவல்

புதுடில்லி, ஜூன் 8

இலங்கையில் நிலவும் நிலைவரத்தை இந்தியா மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

— இவ்வாறு இந்திய வெளிநாட்டு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

அதே சமயம் வடக்கு-கிழக்கு மோதலில் இந்தியாவின் தலையீடு தொடர்பான விடயத்தை அவர் மறுத்துள்ளார்.

இலங்கை அரசு, தமது நாட்டிடம் இது பற்றிய வேண்டுகோள் எதனையும் விடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று வெளியான "டைம்ஸ் ஒவ் இந்தியா" இதழுக்கு அவர் வழங்கிய பேட்டியிலேயே முன்கண்ட தகவல்களை அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதி பூர்வமாகவும் பேச்சுவார்த்தை மூலமாகவும் தீர்வு காண்பதையே இந்தியா விரும்புகிறது.

விடுதலைப் புலிகள் இப்போது நவீனமான [illegible] பயன்படுத்துவது பற்றி இந்தியா பெரிதும் கவலை கொண்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முடியும் என நான் நம்புகிறேன். இலங்கையின் ஐக்கியம் பிரதேச ஒருமைப்பாடு என்ற [illegible] வேண்டும். — இவ்வாறு மேலும் [illegible] (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு - மேற்கு வன்னியன் தோட்டம் சின்னக்கதிர்காமம்

## ★ சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பு மலர் ★ (08 - 06 - 1995)

## ஆசியுரைகள்

சைவ செம்மனச் செல்வர்களே!

வட்டுக்கோட்டை கதிர்காம நாதனுக்கு சித்திரத்தேர் அமைத்து வெள்ளோட்டம் நிகழவிருப்பதறிந்து மிக மகிழ்ச்சி.

கலியுக வரதனாம் கந்தப் பெருமானுக்கு நாமாற்றும் கைங்கரியங்களெல்லாம் மிக மேலானவை. இவ்வாலயத்தில் கதிர்காம மரபு பேணப்படுவது பாராட்டுக்குரியது. அத்தோடு கந்தபுராண படனம் தளர்வுறாது நடைபெறுவது திருவருட்செயல். சைவமக்களின் பெரும்பாக்கியம்.

கந்தப் பெருமானின் திருவருளை உளமார வேண்டி எல்லோருக்கும் எமது மனமார்ந்த நால்லாசிகளை வழங்குகிறோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

---

''கறையானைக் இளையோனே
கதிர்காமப் பெருமானே''

என்று அருணகிரியார் பாடிப்பாடி மகிழும் திருத்தலம் கதிர்காமம் ஆகும்.

இன்று எம் நாட்டிலே கதிர்காம நினைப்பை ஏற்படுத்தக் கூடியதான ஒரு சில ஆலயங்களை நாம் தரிசிக்கக் கூடியதாக உள்ளது. இந்த வரிசையிலே, வன்னியன் தோட்டம்சின்னக்கதிர்காமம் வட்டுக்கோட்டை மேற்கை அருளினால் அணி செய்கிறது இங்கு எழுந்தருளி அருள்பாலிக்கும் சண்முகப்பெருமானுக்கு திருஊஞ்சல் பாடி பேரானந்தம் அடைந்தவர் பண்டிதர் மயில்வாகனனார்.

ஆலயங்களை மையமாக வைத்து ஆற்றுகின்ற பணிகள் எல்லாம் அரன் பணிகளாகவே கருதப்படும். இதைவிட ஆன்மாவுக்கு வேறு ஊதியம் வேண்டியதில்லை. இந்த உண்மையை உணர்ந்த நன்மக்களினால் இத் தேர்த் திருப்பணி நிறைவேறியிருப்பது பெரும் புண்ணியச் செயல் ஆகும். எனவே இத் திருப்பணியில் ஈடுபாடு கொண்ட அனைவரையும் வாழ்த்தி அமைகின்றேன்.

**சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,**

---

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்''

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

இந்த வகையிலே வட்டுக்கோட்டை வாழ் மக்களால் போற்றப்படும் இந்த ஆலயம் சின்னக்கதிர்காமம் என்று பெருமையுடன் பேசப்படுகின்றது. இவ்வாறு பெருமை கூறப்படும் கந்தவேளின் சித்திரத்தேர் வெள்ளோட்ட காட்சி கிடைத்தற்கரியதாகும்.

இன்றைய கஷ்டம் நிறைந்த சூழ்நிலையிலும், கந்தனுக்குத் தேர் அமைத்து வெள்ளோட்டம் காணும் இவ்வூர் மக்களினதும் தேவஸ்தான அறங்காவலரதும் அளப்பரிய சேவைகள் போற்றுதற்குரியதாகும். ஆலய வளர்ச்சிக்கு இவர்கள் ஆற்றும் பங்கு பாராட்டுதற்குரியதாகும்.

சின்னக்கதிர்காமக் கந்தனின் அருள் பெற்று சகலரும் சிறப்புற வாழ வேண்டும் எனக் கூறி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கா. சந்திரராசா
பிரதேச செயலாளர்
மேலதிக அரசாங்க அதிபர்
வலி மேற்கு, சங்கானை.

(விளம்பர இல: 36961)

# மூலஸ்தானத்தில் கதிர்காமத்து ஞானவேல்; இயந்திரப் பேழை எழுந்தருளியாக வருகிறது

கதிர்காமம் தென்னிலங்கையில் விளங்கும் வரலாற்றுப் பெருமையுடைய திருத்தலம் அருணகிரிநாத சுவாமிகளின் திருப்புகழ்ப் பாடல் பெற்ற திவ்வியதலம்.

இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன் இந்த நாட்டின் வடக்கு - கிழக்கு மாகாணத்



தில் வாழ்ந்த முருகபக்தர்கள் கதிர்காமஞ் சென்று கந்தவேள் பெருமானைத் தரிசிக்க வேண்டுமென்று அல்லும் பகலும் பிரார்த்தித்த வண்ணம் இருப்பார்கள். கந்தவேளின் அழைப்புக்குக் காத்திருப்பார்கள். கனவிலோ வேறு வகையிலோ பெருமானுடைய அழைப்புக் கிடைத்ததும் பலரும் சேர்ந்து கால் நடையாக யாத்திரை செய்வார்கள். காடுகள் மலைகள் ஆறுகளைக் கடந்தும், காட்டு விலங்குகளின் தாக்குதலுக்குத் தப்பியும் சென்று கதிர்காமம் சேருவார்கள். ஆடிமாத ஆண்டு விழாக் காலம் முழுவதும் அங்கேயே தங்குவார்கள். தீர்த்தவிழா நிறைவேறிய பின்னரே வீட்டுக்குத் திரும்புவார்கள். அக்காலத்தில் கதிர்காம யாத்திரை அறுபது நாள்களுக்கு மேலும் பிடிக்கும்.

பிற்காலத்தில் புனிதம் மிகுந்த அந்தத் தலத்துக்குப் போய்வர முடியாதபடி நாட்டில் குழப்பங்கள் உண்டாயின. இந்த நிலையிலே கதிர்காமக் கந்தரின் வழிபாட்டை இங்கேயே தேடிக் கொள்ள வேண்டியதாயிற்று.

### கோவில் அமைந்தது

வட்டுக்கோட்டை மேற்கில் உள்ளது வன்னியன் தோட்டம் என்னும் குறிச்சி. இற்றைக்கு ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்குமுன்னாக அங்கு வாழ்ந்தவரும், குருலிங்க சங்கம பத்தியிற் சிறந்தவரும் ஆசாரசீலருமாகிய சின்னட்டியார் என்னும் பெரியார் அருள் வாழ்வில் உயர்ந்திருந்தார். தமது இல்லத்தின் ஒரு பகுதியில் வேற்படைக் கலத்தைப் பிரதிட்டை செய்து நியமமாக வழிபட்டு வந்தார்.

அவருடைய மூத்தமகன் முருகும்பிள்ளை என்பவர் தந்தையாரைப் போன்று வேல் வழிபாட்டை மேலும் விசாலித்து அருள் வளம் பெருக்கினார்.

முருகுப் பிள்ளையின் மக்களில் ஆண்டிக் இளைஞராய் அருளில் முதிர்ந்தவரான வெற்றிவேலு என்பவர் முன்னைத்தவப் பயனாலே கோவில் அமைத்து, அக் கோவிலில் வேலினைப் பிரதிட்டை செய்து, பலரும் வழிபடத்தக்கதாய்ச் சின்னக் கதிர்காமத் தலமாக அமைத்தார். அந்தத் தலத்து வேலவர் பெருமான் ஊஞ்சல்

**அருட்புலவர் பண்டிதர் அ. ஆறுமுகம்**
தலைவர், வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம்

பாடிய பண்டிதர், புலவர் மணி க. மயில்வாகனனார்,

'நீற்றினொடு கண்டிகையும்
மறவா நேயன்
நிறைகுணத்தோன் அநுபூதி
கைவந் துள்ளோன்
ஆற்றல்மலி வெற்றிவேல்
அண்ணல் முன்னாள்
அமைத்ததளி யமர்ந்தருளை
வணங்குந் தேவே...'

என்று விதந்து குறிப்பிட்டிருப்பதும் இதனை அரண் செய்யும்.

### வெற்றிவேலருக்கு ஞானவேல்

வெற்றிவேலர் ஆண்டு தோறும் கதிர்காம யாத்திரை நியமமாகச் செய்தவர். ஒரு நாள் அவர் கதிர்காமக் கந்தர் சந்நிதியில் தம்மை மறந்து உணர்ச்சிவசப் பட்ட நிலையில் அடியற்ற மரம் போல் வீழ்ந்து தியானித்துக் கொண்டிருக்கையில் ஞானவேல் காட்சி தந்தது. அது கந்தர் கருணையென நம்பிய வெற்றிவேலர். அடுத்தநாளும் அதே சந்நிதியில் சாஷ்டாங்கமாக விழுந்து, காதலாகிக் கண்ணீர் பெருக்கி நீண்டநேரம் அசைவின்றிக் கிடந்தார்.

பின்னர் அவர் எழுந்து நின்றதைக் கண்ட கோயிற்பூசகர் — கப்புறாளை— அவரையழைத்து நெற்றியில், நீறிட்டு ஆசீர்வதித்துக் கையில் ஞானவேல் ஒன்று கொடுத்தார். பின்பு ஊருக்கு வந்த வெற்றிவேலர் அந்த ஞானவேலையும், பின்னொரு முறை கதிர்காமத்திற் பெற்ற தங்கவேலையும் தாம் அமைத்த கோயிலில் பிரதிட்டை செய்தார்.

வெற்றிவேலருக்கு மெய்யடியார்கள், சித்தர்கள் வல்ல ஞானிகள் பலரின் தொடர்பும் ஆசியும் வாய்த்தன. கும்புறுப்பிட்டிச் சுவாமி, சடையம்மா, குருநாதக்குருக்

(3ஆம் பக்கம் பார்க்க)



தேர் அமைப்பு:
**சோமசுந்தரம் நாதன்**
(அராலி, வட்டுக்கோட்டை.)

வேல் தாங்கும் குமரன் வண்ணத்
தேரேறி வருகின்றான்
துயர் தீர்க்க வேண்டிடுவோம்

**டனிஸ்ரா விறகு காலை**
வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை
உரிமையாளர்: பா. இரத்தினசிங்கம்

**ஆரணி களஞ்சியம்**
சிவன் கோவிலடி, வட்டுக்கோட்டை.

**சிவாஸ் ஸ்ருடியோ**
பிரதான வீதி, சித்தன்கேணி.

**வீயோடை முத்துமாரி அம்பாள்**
தேவஸ்தானம் மூன்றாம் பரிபாலகர்
சிவலிங்கம் கலையரசன்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

வைத்தியசாலையில் உதவியாளராகக் கடமையாற்றுவதற்கு பெண் தேவை. வயது 25—45. திங்கள், செவ்வாய், வெள்ளி பூட்டு. மெடிக்கல் வைத்தியசாலை, ஸ்ரேசன் றோட், சுன்னாகம் ரயில் கடவைக்கு அருகில்.
[36967]

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

20-5-95 வைகாசி மாதம் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை பஸ்ஸில் செல்லும்போது ஒரு 'ரவலிங்' பாக் என்னால் கண்டெடுக்கப்பட்டது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும் தொடர்பு: த. நந்தகோபால் [ஆயுள்வேத வைத்தியர்], புலோலி தெற்கு, புலோலி
(8432)

### தொடர்புகொள்ளவும்

மரத் தளபாடம் வாங்கிய புண்ணியமூர்த்தி உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். இல. 71/5, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
[36976]

## சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்குரிய மே மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் இன்றும் நாளையும் காலை 9 00 மணி முதல் நண்பகல் 12 00மணி வரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வழங்கப்படுமென கூட்டுத்தாபன கணக்காளர் திரு. க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார். [ஒ]

## புதுப்பொலிவுடன் பளை கிராமிய வைத்தியசாலை

தென்மராட்சி, ஜூன் 8

உலக சூழல் பாதுகாப்பு தினத்தையொட்டி கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சிரமதானப் பணியினால் பளை கிராமிய வைத்தியசாலை புதுப்பொலிவுடன் காட்சி தருகிறது

பளைப் பிரதேச செயலர் திரு க. செந்தில்நந்தன் தலைமையில் பளை நகர்ப் பகுதியில் உள்ள அரச, உள்ளூராட்சி கூட்டுறவு நிறுவனங்களும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம், பளை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியனவும் பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களும் சிரமதான நிகழ்வில் பங்குபற்றினர். [ஒ-117]

## ஆண்டு 12, 13 பரீட்சைகள்


மேற்படி பரீட்சைகளுக்கு விணாத்தாள்களுக்கான விண்ணப்பங்கள் பல பாடசாலைகளில் இருந்து கிடைக்கப் பெறவில்லை. உரிய காலத்தில் விண்ணப்பிக்க தவறிய பாடசாலை அதிபர்கள் 09 - 06 - 1995க்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பித்து ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

— செயலாளர்,

தொண்டமானாறு வெளிக்கள நிலையம்.

(36980)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்**
(உரிமையாளர், ராஜு ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம், சுப்பிரமணியன் சோடாக்கம்பனி, வல்வெட்டித்துறை)

மலர்வு: 12 - 07 — 1913
உதிர்வு: 25 — 05 — 1988
திதி: 08 — 06 — 1995

ஏழாண்டு காலமாய் எம் தலைவன் நினைவாலே வாழாது வாழ்கின்றோம் வையத்தில் - மாளாத அன்பாலே நெய்பெய்து அழுது கரைகின்றோம் உன்பால் உணர்ந்து நாம்.


மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.
(8576)

## எரியும் மனங்களின் முன் 8 ஆண்டு நினைவலைகள்



**மு. சற்குணநாதன்**
தோற்றம்: 1958 — 07 — 23
மறைவு: 1987 — 06 — 08



**கு. சிவானந்தகுரு**
தோற்றம்: 1944 — 02 — 08
மறைவு: 1987 — 06 — 08

எங்கள் கண்மணிகளே!
நீங்கள் மறைந்து ஆண்டுகள் எட்டு
ஓடிவிட்டன எட்டுத்திக்கும்
உங்களைத் தேடி அலைகின்றோம்
நீங்கள் வரமாட்டீர்களா ...... என்று
அன்று சிறிலங்கா இராணுவம் உங்களை
வெட்டிச் சாய்த்து சுட்டு எரித்தனரோ......
இன்று நாம் எமக்கு ஆதரவாக
இருந்த அன்னை தந்தை அனைவரையும்
இழந்து தவிக்கின்றோம்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

சகோதரர்கள்
அம்மன்கோவிலடி,
தையிட்டி.

மனைவி, பிள்ளைகள்.
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(8430)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## மீண்டும் காக்கி உடை!

வடக்கு - கிழக்கில் போரைப் பெரிய அளவில் நடத்துவதற்கான சகலவித ஆயுதங்களையும் அரசு கடந்த ஒன்றரை மாதங்களாகச் செய்து வருவது புதிய செய்தி அல்ல.

வெளிநாடுகளில் இருந்து நவீன போர்த்தளபாடங்களை கொள்வனவு செய்து வருகிறது. வெளிநாட்டு இராணுவ ஆலோசகர்களை அழைத்து போரில் வெல்வதற்கான யோசனைகளைப் பெற்று வருகிறது. இவற்றுக்கும் மேலாக தனக்கு இராணுவ உதவி செய்யுமாறும் பல நாடுகளிடம் இரந்து நிற்கிறது.

வெளிநாடுகளிடம் இருந்து ஆயுதம், ஆலோசனை உதவி கேட்பது போல ஆளணி (துருப்புகளை) தந்து உதவுமாறு கேட்பது அழகல்ல, உசிதமும் அல்ல. இந்தியத் துருப்புகளை ஜே. ஆர். தருவித்திருந்த போதிலும் அதனால் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை என்பதனை இப்போதைய ஸ்ரீலங்கா அரசு மறந்துவிட முடியாது. மறுபுறத்தில் வெளிநாட்டுத் துருப்புகள் விலைகொடுத்தோ அன்றி இரவலாகவோ வாங்கக் கூடியனவும் அல்ல.

அதனால் போர்க்களத்துக்குத் தேவையான சிப்பாய்களை ஸ்ரீலங்காவிலேயே திரட்ட வேண்டும். நாட்டின் வளங்களுடன் ஒப்பிடுகையில் இராணுவத்தினரின் எண்ணிக்கை ஏற்கனவே அதிகவிகிதாசாரம் உண்டு. முப்படைகளிலும் சுமார் இரண்டு லட்சம் துருப்புகள் உள்ளன. கடந்த நான்கு, ஐந்து வருடங்களிலேயே இந்த எண்ணிக்கை இவ்வாறு ஊதிப் புடைத்தது. பத்து வருடங்களில் பத்து மடங்கு அதிகரித்ததாகப் புள்ளி விவரங்கள் உண்டு.

அவ்வாறு இருந்தும் கடந்த ஐந்து வருடங்களாகத் தமிழர் தாயகத்தில் நடந்த போரில் ஸ்ரீலங்கா அரசால் வெல்ல முடியவில்லை. ஒவ்வொரு தோல்வியின் போதும் ஆட்பலம் போதாது என்று கூறித் தடவைக்குத் தடவை இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு நடத்தியதே அன்றி களத்தில் கண்ட மிச்சம் எதுவுமில்லை.

ஜே. ஆர்., பிரேமதாசா, விஜேதுங்கா ஆகியோரின் தலைமையின் கீழ் லலித் அத்துலத் முதலி, ரஞ்சன் விஜேரத்தினா ஆகியோர் நடத்திய போர்களைவிட, சந்திரிகாவும், அனுருத்தவும் நடத்தப்போகும் போர் வேறுபட்டதாக இருக்கப்போகிறது; குறிப்பாக இதுவே இறுதிப்போராக — தாய்ப் போராக — இருக்கும்.

அதனால் முன்னரைவிட பெரும் எடுப்பில் ஆயத்தம் செய்கிறார் சந்திரிகா. துருப்புகளுக்குப் புதியவர்களைச் சேர்ப்பதில் படை அதிகாரிகள் தீவிரம் காட்டுகின்றார்கள்.

பெரும் எண்ணிக்கையான சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதற்கு முன்வந்த போதிலும் மேலதிகமாகச் சேர்ப்பதற்கு, களத்தில் மடிவதற்கு அஞ்சிப் படைகளை விட்டுத் தப்பி ஓடிய 26,000 பேரையும் மீண்டும் இராணுவத்தில் சேர்ப்பதற்கு முடிவாகி உள்ளது. இவர்கள் பயத்தின் நிமித்தம் சொல்லாமல் கொள்ளாமல் படையை விட்டு ஓடியவர்கள். அவ்வாறு செய்தமைக்காக தண்டனை எதுவும் வழங்காமல் அவர்கள் மீண்டும் படை வீரர்கள் ஆக்கப் படுகிறார்கள்!

படையை விட்டு நீங்கியிருந்த காலத்தில் தென்பகுதியில் இவர்களே பல வன்செயல்களைச் செய்தார்கள் என்று பொலிஸ் அறிக்கைகள் குற்றஞ் சாட்டியதும் உண்டு.

படையை விட்டுத் தப்பி ஓடிய காலத்தில் இவர்களுக்கு வீரமும், துணிச்சலும் பிறந்திருக்கும் என்று எண்ணித்தான் போலும் அரசாங்கம் அவர்களுக்கு மீண்டும் காக்கி உடைகளை வழங்குகிறது!

தென்னிலங்கையின் கிராமப் புறத்து ஏழைக் குடும்பங்களின் இளைஞர்களைப் பலிகொடுத்தேனும், போரில் வென்றுவிட வேண்டும்; ஆட்சியைத் தக்க வைக்க வேண்டும் என்ற முந்திய தலைவர்களின் வழியிலேயே சந்திரிகாவும் செல்கிறார். சிங்கள ஆட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒரே வர்க்கமே என்பதற்கு இது இன்னோர் உதாரணம்!

# குடாநாட்டு வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு ஏற்படும் நிலை

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்கு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்கான இரண்டாம் காலாண்டுக்குரிய மருந்து வகைகள் இன்னும் இதுவரை வந்து சேரவில்லை.

இதனால் யாழ். குடாநாட்டு அரசினர் வைத்திய சாலைகளில் மருந்து வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது முதலாம் காலாண்டில் கையிருப்பில் இருந்த மருந்து வகைகளே யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் அரசினர் வைத்தியசாலைக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இரண்டாம் காலாண்டுக்கான மருந்து வகைகளை கொழும்பிலிருந்து விரைவாக தருவிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை பதில் யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

## வீதியோரங்களில் உணவு தயாரிப்பதற்குத் தடை!

உணவகங்களுக்கு வெளியே — வீதியோரங்களில் — உணவுப் பொருள்களை தயாரிப்பது, தமிழீழ சுகாதாரப் பகுதியினரால் தடை செய்யப்பட்டுள்ளது.

வீதியோரங்களில் வைத்து தயாரிக்கப்படும் உணவுப் பொருள்களில் காற்றினால் பரவும் நோய்க்கிருமிகள், வாகன தூசுகள், என்பன படிந்து பல்வேறு சுகாதார கேடுகளை தோற்றுவிக்கின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு கொத்துறொட்டி, அப்பம் போன்ற உணவு வகைகளை, உணவகங்களுக்குள்ளேயே வைத்து சுகாதார முறைப்படி தயாரிக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது (ஓ-5-77)

கொழும்பில் ஊடுருவலாம்

## தற்கொலைப் படை குறித்து விசேட பொலீஸ் பரிசீலனை

கொழும்பு, ஜூன் 8

இரண்டு வாரங்களுக்கு முன் கொழும்பு வந்தடைந்ததாகக் கூறப்படும் ஆறு பேரைக் கொண்ட பெண்கள் தற்கொலைப் பிரிவு பற்றிய செய்திகளை விசேட பொலீஸ் குழு ஒன்று பரிசீலிப்பதாக அறிய வருகின்றது.

சில வாரங்களுக்கு முன் தமிழ்ப் பெண் ஒருவர் கலுபோவிலவில் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்ததைத் தொடர்ந்து பொலீஸார் 10 பெண்களை தற்கொலைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்தார்கள்.

இவர்களிடமிருந்து முக்கியமான தகவல்கள் கிடைத்துள்ளன என்று கூறப்படுகிறது.

கடந்த சில வாரங்களில் பொலீஸார் கொழும்பில் 2 ஆயிரம் தமிழர்களையும் புலிகள் என்ற சந்தேகத்தில் 20 பேரையும் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. [க]

யுத்தச் செலவைச் சமாளிக்க

## பாதுகாப்பு வரியை அதிகரிக்க அரசு முடிவு

கொழும்பு, ஜூன் 8

யுத்தத்துக்குத் தேவைப்படும் நிதியை திரட்டுவதற்காக பாதுகாப்பு வரியை ஒரு சத வீதத்தால் அதிகரிக்க அரசு ஆலோசித்துள்ளது.

தற்போது 3.5 வீதமாக உள்ள பாதுகாப்பு வரி 4.5 வீதமாக அதிகரிக்கப்படும்.

இந்த ஒரு வீத வரி அதிகரிப்பினால் 8 ஆயிரம் கோடி ரூபா பாதுகாப்புச் செலவுக்கு மேலதிகமாகக் கிடைக்கும் என்றும் அரசு எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்துக்கு அவசரம் தேவையான இராணுவ வாகனங்கள், விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், விசைப்படகுகள் என்பனவற்றை கொள்வனவு செய்ய இந்நிதி செலவிடப்படும்.

இவ்வரி அதிகரிப்பு தொடர்பான பிரேரணையை இன்று அல்லது நாளை நீதி அரசமைப்பு விவகார, வெளிநாட்டு வர்த்தக அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார் என்று அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது. (ஐ-3-6)

## புலிகளின் குரல் வானொலியில்

வியாழன் இரவு

08 06 1995

- ★ 8-02— சொல்லுங்கள் பார்க்கலாம்.
- ★ 8-10 - நோய் தீர்க்கும் மூலிகைகள்.
- ★ 8-20— உழைப்போம் உயர்வோம்— "நாட்டினை வளமாக்குவோம்" குறுநாடகம்.
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40— மொழியும் வாழ்வும் -[15]
- ★ 8-50— எங்களின் தேசம் -(22)

09 — 06 — 1995

வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீரணக்கம்
- ★ 7-15— மணியாரம்.
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40— தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலியில்

வியாழன் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15— மழலைகளுக்காக
- ★ 5-30 - இசையும் கதையும்
- ★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
- ★ 6-02 பொன்விளையும் பூமி
- ★ 6-15— விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20— விளையாட்டு தொடர்பான கேள்வி பதில்

## மெய்வல்லுநர் இலக்கங்கள்

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் யாழ் மாவட்ட பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றும் சாவகச்சேரி கோட்ட மாணவர்களுக்கான இலக்கங்கள் நாளை காலை 9 மணிக்கு கோட்ட அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலயங்களில்

மீசாலை தெற்கு சுந்தன் பிள்ளையார் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு சிவஸ்ரீ கைலை — வாமதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஓ-31)

★ ★ ★

அல்வாய் வேவிலந்தையம்பதி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை நடைபெறும், தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (க)

★ ★ ★

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை பகல் வேள்வி திருவிழா கொடி இறக்கத்துடன் நிறைவுறும். (ஓ-12)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 8

உசன் ஸ்ரீகந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.

உற்சவ காலத் தெய்வீகப் பேருரைகள் வரிசையில் இன்று திரு. கு. சண்முகநாதன் "நாமென் செய்யும்?" என்ற பொருளிலும் —

நாளை திரு. ஆறு. திருமுருகன் "வென்ற ஐம்புலன் மிக்கார்" என்ற பொருளிலும்— உரையாற்றுவர். [அ]

## பலாலி அதிகாரியின் பதில்!

யாழ்ப்பாணம், ஜூன். 8

அளவெட்டிகும்பழாவளைப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் நடைபெறுவதனால் —

அடியார்கள் இராணுவம் நிலை கொண்டுள்ள இடத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திற்குள் நடமாடக் கூடாது என்று பலாலி இராணுவமுகாம் அதிகாரி அறிவித்திருக்கிறார்.

மேற்படி ஆலய வருடாந்த உற்சவத்தை இம்மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை நடத்துவதற்கு அனுமதி கோரிய போதே இவ்வாறு அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டதாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார். (அ)

## நாடாளுமன்றப் பகுதியில் பாதுகாப்பு மேலும் தீவிரம்

கொழும்பு, ஜூன் 8

கொழும்பு நகரில் தற்போது ஏற்பட்டுள்ள குண்டு வெடிப்பு அச்சம் காரணமாக நாடாளுமன்றத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் பலப்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்பகுதியில் வாகனப் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வெளியாரின் நடமாட்டமும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

நாடாளுமன்றச் சூழல் பகுதியில் குண்டுத் தாக்குதல்கள் நடக்கலாம் என்ற அச்சம் கடந்த சில மாதங்களாக நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் கட்டுநாயக்கா குண்டு வெடிப்பைத் தொடர்ந்து தெற்கில் பரவலாக குண்டு வெடிப்புகள் நடக்கும் சாத்தியம் உண்டு என்று கருதப்படுகிறது. (ஓ-14)

## மூலஸ்தானத்தில்......

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள், கீரிமலைப் பஞ்சாட்சரக் குருக்கள், குஞ்சுப்புரி நவநாத சித்தர், சங்கர சுப்பையர், சித்தாண்டி யானைக் குட்டிச் சுவாமி போன்ற ஞானிகளின் சகவாசத்தால் அவர் திருவருளில் திளைத்தார். குஞ்சப்புரி நவநாத சித்தர் வெற்றிவேலரின் கையில் இயந்திரப் பேழையொன்றைக் கொடுத்து, "இஃது எல்லாம் தரும். இதனை உமது கோயிலில் வைத்து வழிபாடு செய்யும்" என்று கூறி நெறிப்படுத்தினார்.

இயந்திரப் பேழை

அவர் வாக்கைச் சிரமேற்கொண்டு வெற்றி வேலரும் தாம் முன்பு பிரதிட்டை செய்த ஞானவேற்படைகளொடு இயந்திரப் பேழையையும் வைத்து மெய்யன்புடன் பூசை நடத்தி வரலானார்.

வெற்றிவேலர் அமைத்த கோவிலை அவரின் தமையனாராகிய கந்தையா உபாத்தியாயர் 1947ஆம் ஆண்டில் புனரமைப்புச் செய்து பொலிவுபெற வைத்தார். ஊரவர், உறவினர், நண்பர், தொண்டர் பலரும் பக்தி பண்ணி வழிபடவும், தீராநோய் தீர நோயாளர் தங்கும் மண்டபங்களைக் கொண்டதாகவும் அந்தக் கோவில் நாளிலும் பொழுதிலும் அருள் வளம் பெருகிச் சிறந்தது. இக்காலப் பகுதியில் திரு. த. வல்லிபுரம் அவர்களும் உடன் நின்று உதவிகள் புரிந்து வந்தார். 1971ஆம் ஆண்டில் திரு. தேவமாப்பாணசிங்கம் என்பவரும் உதவிகள் செய்ததுண்டு. வெற்றிவேலருக்கு வயது வந்த காரணத்தால் அவர் தமது பொறுப்பை மகன் நல்வேல்நாதனிடம் 1973ஆம் ஆண்டளவில் ஒப்படைத்தார்.

கந்தபுராண படனம்

நல்வேல் நாதன் அவர்கள் தந்தையாரைப் போலவே ஆசாரம், பக்தி, அருள் வளம் உடையவர். அவர் கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் ஆசி பெற்றவர். அரச சேவையில் நின்றும் விலகி ஓய்வூதியம் பெற்றுக் கொண்டு தேவஸ்தானத்தைச் செவ்வனே பரிபாலனஞ் செய்து வருகிறார்.

புதுவருடப் பிறப்பு விழா, வைகாசி மாதத்துப் பதினொரு திருவிழாக்கள், ஆனிப் பொங்கல், நவராத்திரி விழாக்கள், கந்தசஷ்டி விழாக்களும், கந்தபுராண படனமும், திருவெம்பாவை விழாக்கள் போன்ற விசேட விழாக்கள் காலந்தோறும் நடைபெறும். நித்தமும் அதிகாலை 5 மணிக்கும், மாலையிலும் பூசைகள் செப்பமாக நடைபெறும்.

கதிர்காமப் பூசை முறை

பெரிய கதிர்காமத்தில் கைக்கொள்ளப்படும் பூசை முறைகளே இந்தச் சின்னக் கதிர்காமத்திலும் கடைப் பிடிக்கப்படுகின்றன. வாயைத் துணியால் மறைத்துக் கட்டி மௌனமாகப் பூசைசெய்தல், திருவிழாவில் ஞானவேலையும் இயந்திரப் பேழையையும் வாகனத்தில் எழுந்தருளச் செய்து வீதி வலம் வருதல் போன்றவை குறிப்பிடத்தக்கன.

அங்கே இந்த யூன் மாதம் முதலாம் நாள் கொடியேற்ற விழாவும், தொடர்ந்து மற்றைய விழாக்களும் நடைபெற்று வருகின்றன. நாளை மறுதினம் 10 ஆம் திகதி வள்ளிநாயகி தெய்வநாயகி சமேதராய் ஆறுமுகப் பெருமான் தேரில்வந்தும் பவனி வருவார். அதற்கடுத்த நாள் தீர்த்த விழாவும் அன்னதானமும் நடைபெறும்.

இன்று சின்னக்கதிர்காமத் தேவஸ்தானத்தின் அறங்காவலராய் தொண்டு செய்யும் வெற்றிவேல் நல்வேல்நாதன் அவர்கள் இந்த ஆண்டில் தாம் பெருந்தொகைப் பணம் முதலிட்டு, அன்பர் சிலரிடமும் உதவி பெற்றுச் சித்திரத் தேரை நிர்மாணித்துள்ளார். அந்தச் சித்திரத் தேரின் வெள்ளோட்ட விழா இன்று வியாழக்கிழமை [08 - 06 - 1995] சிறப்பாக நடைபெறுகிறது.

# தேசாபிமான உணர்வுள்ள....

வர் வடபுலம் மீதான படையெடுப்பை அரச படைகள் தொடங்க இருக்கின்றன.

இத்தகையதொரு படையெடுப்பு யாழ். குடாநாட்டிற்குள்ளா? அல்லது வன்னிப் பெருநிலத்திலா அல்லது ஒரே சமயத்தில் இரண்டு இடங்களிலுமா? நடைபெற இருக்கின்றது என இப்போது உறுதியாகக் கூற முடியாதுள்ளது. ஆயினும் குடா நாட்டை ஆக்கிரமிப்பதிலேயே சிங்கள அரசு குறியாக இருக்கின்றது.

எது எப்படியோ, புதிய அரசு என்ற வகையில் ஒரு பாரியபடையெடுப்பை நடாத்தும் உறுதியுடன் சந்திரிகா அரசு உள்ளது என்பதுமட்டும் உண்மை. அத்துடன் குறித்த அப்படையெடுப்பை மழைகாலம் தொடங்க முன்னர்செய்து முடிக்க வேண்டும் என்றும் அது திட்டமிட்டுள்ளது.

இன அழிப்பை நோக்கமாகக் கொண்டது

ஏனைய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களால் குடாநாடு நிரம்பி வழிகின்றது என்று சிங்கள அரசுக்குத் தெரியும். இந்த நிலையில் குடாநாடு மீது ஒரு பாரிய படையெடுப்பை நடத்துவது என்று சிங்கள அரசு முடிவெடுத்தால் அது நிச்சயமாகஒரு இன அழிப்பை நோக்காகக் கொண்டதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தடை செய்யப்படாத பொருள்களுக்கும் இப்போது தாண்டிக்குளத்தில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. உணவு, மருத்துவப் பொருள்களுக்கும் பலத்த கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளன. அரசின் இந்தச் செயல்கள் ஒரு பாரிய படையெடுப்பிற்கான முன்னேற்பாடுகள் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ள முடியாது.

வடபுலம் மீதான படையெடுப்பு என்பது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகி விட்டது. இப்போது கேள்வி எதுவெனில் அது எப்போது? என்பதே ஆகும்.

முறியடிப்பது எப்படி?

இந்த நிலையில் தமிழ் மக்களாகிய நாங்கள் என்ன செய்யவேண்டும்.

சிங்கள அரசின் படையெடுக்கும் திட்டத்தை செயற்படவிடாது தடுக்கும் அதிகாரம் தமிழ் மக்களுக்கு இல்லை. ஆனால் படையெடுப்பை முறியடித்து, சிங்களப் படைகளுக்கு ஒரு பாடம் புகட்டும் சக்தி தமிழ்மக்களுக்கு உண்டு. புலிகள் இயக்கத்தின் ஆட்பலத்தை அதிகரிப்பதன் மூலம் அந்த சக்தியை பெற்றுக் கொள்ளும் வலு தமிழினத்திற்கு உண்டு.

அண்மைக்காலமாக கணிசமான அளவில் இளைஞர்களும், இளம் பெண்களும் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இது போராட்டத்திற்கு பலத்த நம்பிக்கையைத் தந்துள்ளது. இப்புதிய போக்கு மேலும் வளர்ச்சி பெற்று, ஆயிரக்கணக்கில் எமது இளைஞர்கள், புலிகள் இயக்கத்தில் இணையும் போது பாரிய படைபலமாக, தமிழர் படை பலம் பெருவளர்ச்சி அடையும் அத்தகையதொரு படைபலம் வளர்ச்சியானது சிங்களப் படையெடுப்பிற்கு தகுந்த பாடத்தைக் கற்பிக்கும் என்பது திண்ணம்.

வதந்திகள்

இதேவேளை எமது இனம் சமூகம். தாமாகவே விரும்பி முன்வந்து. இயக்கத்தில் இணைந்து கொள்ளும் செயலை சிலர் கொச்சைப் படுத்த முயல்வதையும் காணக்கூடியதாக உள்ளது. அதாவது 'பலவந்தப்படுத்தியே இயக்கத்திற்கு ஆட்கள் சேர்க்கப்படுகின்றனர்' என்று தப்பாக பிரசாரம் செய்வதுடன், தமது கருத்தை நியாயப்படுத்துவதற்காக சில கற்பனையான சம்பவங்களை உருவாக்கி, அவற்றை வதந்திகளாகப் பரப்புவதையும் காணக்கூடியதாக உள்ளது. உண்மையில், நாம் எவரையுமே கட்டாயப்படுத்தி இயக்கத்தில் இணைக்கவில்லை என்பதை எமது மக்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

ஒரு தேச விடுதலைப் போராட்டத்தில் விடுதலைச் சேனைக்கான ஆட்பலத்தை, குறித்த அந்த மக்கள் திரளிலிருந்து திரட்டுவதே வழமை. எதிரியின் ஆக்கிரமிப்புச் செயலைச் சுட்டிக்காட்டி — எதிரிப் படைகளின் அராஜகங்களை விளக்கி — விடுதலையின் அவசியத்தை உணர்த்தி விடுதலைப் படைக்கான ஆட்களை திரட்டுவதுதான் உலக வழமை இந்த வழமைக்கு முரணாக [illegible] யும் செய்யவில்லை. இதேவேளை [illegible] நெருக்கடி ஏற்படும்போது தேசத்தைக் காப்பதற்காக தனது குடிமக்களை கட்டாய இராணுவ சேவைக்கு அழைக்கும் வழமை உலகத்தில் உண்டு. அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளில் இதை அதிகாரபூர்வமாகச் செய்வதற்காக சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் இவ்விதமான கட்டாய ஆட்சேர்ப்பில் புலிகள் இயக்கம் இதுவரை ஈடுபடவில்லை. அவ்விதம் ஈடுபடவேண்டிய அவசியமும் இதுவரை எழவில்லை.

காலத்திற்குக் காலம் எமது இளைஞர்கள் — இளம் பெண்கள் தாமாகவே முன்வந்து இயக்கத்தில் இணைந்து தமிழரின் படை பலத்தை அதிகரிப்பதற்கு துணை செய்கின்றனர் என்பதே உண்மையாகும்.

ஆட்சேர்ப்பும் கல்வியும்

இது ஒரு புறமிருக்க போராட்டத்திற்கான ஆட்சேர்ப்பையும், மாணவர்களின் கல்வியையும் சிலர் ஒன்றாகப் போட்டுக் குழப்பும் செயலையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இந்தப் போர் சூழலிலும், கல்விக்கு இடைஞ்சல்கள் வராது. மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு இயக்கம் உறுதுணையாக இருக்கின்றது. சிறிலங்காவின் அரசியல்வாதிகளே, உதாரணம் காட்டிப் பேசும் அளவிற்கு தமிழ் மாணவர்களின் கல்வியில் புலிகள் இயக்கம் அக்கறைகாட்டி வருகின்றது.

தமிழீழ கல்விக் கழகம், மாணவர் அமைப்பு தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை, அறிவியல்கழகங்கள்என எமது மாணவர்களின் கல்வியை — அதற்கான நிருவாகத்தை — திறம்பட நடாத்துவதற்காக பல அமைப்புக்களை நிறுவி கல்விக்கு இயக்கம் ஊக்கம் கொடுக்கின்றது. அத்துடன் கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு தலைவர் பிரபாகரன் அவர்கள் பரிசில்கள் வழங்கி தனது பிரத்தியேக அக்கறையையும் காட்டி வருகின்றார்.

கல்வியும் போராட்டமும்

எமது இனத்தின் வாழ்க்கையைப் பொறுத்தவரையில் கல்வியும், போராட்டமும் பிரிக்க முடியாத இரண்டு அம்சங்களாகி விட்டன. கல்விக்கு போராட்டம் காப்பரணாக விளங்கும் அதேவேளை, போராட்டத்திற்கு கல்வி கவசமாகவும் விளங்க வேண்டும். கல்விக்கு நாம் ஊக்கம் கொடுக்கும் அதேவேளை கல்வியா? போராட்டமா? என்று ஒரு மாணவன் தெரிவு செய்ய முயல்வதை நாம் தடுக்கமாட்டோம்.

போராட்டத்தின் அத்தியாவசிய தேவைபற்றி மாணவர்கள் மத்தியில் பிரசாரம் செய்கின்றோம் என்பது உண்மையே. ஆனால் அதை கல்விக்கு எதிரான நிலைப்பாடாக எவரும் கருத முடியாது. அதேபோல கல்விக்கு ஆதரவாக நாம் எவ்வளவோ வேலைத் திட்டங்களை மேற்கொள்கின்றோம். ஆயினும் அதைப் போராட்டத்திற்கு புறம்பான ஒன்றாக எவரும் நோக்க முடியாது. எமக்குக் கல்வியும் தேவை; போராட்டமும் தேவை. இதில் எதைத் தேர்ந்தெடுப்பது என்று முடிவெடுக்கும் உரிமையை மாணவர்களிடமே விட்டுள்ளோம்.

இதேவேளை மறுபுறத்தில் எமது மக்களை தன்புறத்தே வென்றும், எமது மண்ணை ஆக்கிரமிக்கவென்றும் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்த வண்ணம் உள்ளனர். சிங்கள அரசின் படைபலப் பெருக்கத்திற்கு இணையாக புலிகள் படைபலமும் உயர்வடையாது விட்டால் தமிழ்மக்கள் எத்தகைய அவலத்தை சந்திப்பார்கள் என்பது எங்கள் அனைவருக்கும் தெரியும்.

வரலாற்றுத் தேவை

எனவே தான் சிங்களப் படைப் பெருக்கத்திற்கு இணையாக புலிகளின் படைப் பலத்தையும் வளர்த்தெடுக்க வேண்டிய அத்தியாவசியத் தேவை எம்முன் இருக்கின்றது. இந்த வரலாற்றுத் தேவையை நிறைவேற்றவே இப்போது நாம் ஆட்சேர்ப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். எமது இயக்கத்தின் ஆட்சேர்ப்பு மையங்களாக அரசியல் துறையினரின் மாவட்ட, கோட்ட, சிற்றூர் அலுவலகங்கள் இயங்குகின்றன.

சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்பிலிருந்து எமது தாய் மண்ணை மீட்டெடுக்கவேண்டும்; அவ்விதம் ஒரு மண்மீட்புப் போரில் ஈடுபடுவதற்காக புலிகள் இயக்கத்துடன் இணைந்து கொள்வது எனது தேசியக் கடமை என்று எண்ணும் தேசாபிமான உணர்வுள்ள அனைத்து இளைஞர்களும், இளம் பெண்களும் எமது ஆட்சேர்ப்பு மையங்களுக்குச் சென்று தத்தமது பெயர்களை பதிவுசெய்து கொள்ளும்படி உரிமையுடன் அழைக்கின்றோம். — இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ

அல்வாய் - வேவிலந்தையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

புனராவர்த்தனப் பிரதிஷ்டா நவகுண்ட பக்ஷ மகாயாக

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

வைகாசித் திங்கள் 25 ஆம் திகதி (08 - 06 - 1995) இன்று வியாழக்கிழமை காலை 7 மணி முதல் மஹா கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம்.

27 ஆம் திகதி (10 - 06 - 1995) சனிக்கிழமை காலை 9 மணி முதல் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல்.

29 ஆம் திகதி (12 - 06 - 1995) திங்கட்கிழமை அதிகாலை 6-05 மணி முதல் 6-52 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்

பிரதிஷ்டா பிரதம குரு
வேதாகமமாமணி சிவபூஜாநிதீ
சிவஸ்ரீ பால. வைத்தியநாதசிவாச்சாரியார்
ஊரெழு

தேவஸ்தான குரு
தி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்
அல்வாய்

விசேட நாதஸ்வர தவில் கச்சேரிகளும் இடம்பெறும்

மாலை 5 மணி முதல்
சுவாமிகள் திருவீதி உலா பவனி உற்சவம் நடைபெறும்.

தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்

அனைவரும் வருக! அருள் பெறுக!

சுபம்.

— பரிபாலனசபை.

அல்வாய். [36975]

---

## இந்து சமயப் பேரவை

யாழ்ப்பாணம்

இந்துக்கோவில்கள் சம்பந்தமான

## முக்கிய கலந்துரையாடல்

இடம்:- யாழ். செயலக மாநாட்டு மண்டபம்
காலம்:- 09 - 06 - 1995 வெள்ளிக்கிழமை காலை 9 மணி

யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய பிரதேச செயலர் கள் பிரிவுகளைச்சேர்ந்த இந்துக்கோவில்களின் குருமார்கள், பரிபாலனசபை/ அறங்காவலர்சபை பிரதிநிதிகள், இந்துசமய சங்கங்கள்/ சபைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் இந்து சமய அபிமானிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சி. சக்திகிரீவன்
கௌரவ செயலாளர்

இந்துசமய பேரவை,
375, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (சி-1455)

---

## மரண அறிவித்தல்கள்

### சின்னான் முருகேசு

(ஓய்வுபெற்ற காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் மடத்தடியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சின்னான் முருகேசு நேற்று (07 - 06 - 95) காலமானார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மு. கேதீஸ்வரன்
(மகன்)

[36987]

### கணவதி - பிள்ளையான்

[முன்னாள் கைதடி பிள்ளையார் சைக்கிள் வேக்ஸ், உரிமையாளர்]

கைதடிச் சந்தியை வசிப்பிடமாகக் கொண்ட கணவதி - பிள்ளையான் அவர்கள் 7-6-95 நேற்று சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சிதேவியின் அன்புக் கணவரும், டென்மார்க்கில் வசிக்கும் இராஜேந்திரம், செல்வராணி, சகிலா சுவிற்சலாந்தில் வசிக்கும் கந்தசாமி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், டென்மார்க் மகாலிங்கம், குணலிங்கம் (கைதடிச் சந்தி), இராசாத்தி, ஸ்ரீஸ்கந்தராசா (அரசாங்க முதியோர் இல்லம், கைதடி), கதிர்காமநாதன் (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்லத்துரை சிதேவி ஆகியோரின் சகோதரரும், சவுதிகா, சத்தியா, சோவனா, சமிதா, டானியல், துஸ்சிய, துஸ்சியன் ஆகியோரின் பேரனுமாவர்.

அன்னாரின் பூதவுடல் [7-6-95] புதன்கிழமை நேற்று மாலை 5 மணிக்கு கைதடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
ச. கார்த்தி அவர்கள்
(மைத்துனர்)

கைதச் சந்தி,
கைதடி (36978)

---

## விளையாட்டு நிகழ்வு

''உதயன்'' கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் பருத்தித்துறை திக்கமுனையில் உள்ள கழக மைதானத்தில் நடக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி — மயிலிட்டி கண்ணகி வி.க ''ஏ'' அணி எதிர் கரவெட்டி நவசக்தி வி.க அணி.

★ 4.45 மணி — மயிலிட்டி கண்ணகி வி.க ''பி'' அணி எதிர் இளவாலை யங்ஹென்றீஸ் வி.க அணி. [ஐ-3]

## இரு நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன். 8

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் ''ஈழத்துப் படைப்பிலக்கியச் செல்நெறி'' என்ற தலைப்பிலான இரு நாள் ஆய்வரங்கு எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது.

நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பமாகும்.

முதல்நாள் கருத்தரங்கிற்கு பேராசிரியர் கா. சிவத்தம்பியும் —

இரண்டாம்நாள் கருத்தரங்கிற்கு பேராசிரியர் அ. சண்முகதாஸும் தலைமை வகிப்பர்.

''1950 தொடக்கம் 1990 வரை தமிழினஉணர்வும் இலக்கியமும்'' என்ற தலைப்பில் முதல் நாளும் —

''வெளிச்சம் சிறுகதைகள்— ஒரு மதிப்பீடு'' என்ற தலைப்பில் இரண்டாவது நாளும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் உரையாற்றுவார். (ஐ)

## கவிஞர் முருகையனுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 8

கவிஞர் முருகையனுக்கு அறுபது வயதாகுவதை ஒட்டிய இலக்கிய ஒன்றுகூடல் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு எழுத்தாளர் ''நந்தி'' தலைமையில் ஆரியகுளம் சந்தியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் மூத்த எழுத்தாளர் சி. வைத்திலிங்கத்தின் உருவப்படத்தைக் கவிஞர் முருகையன் திறந்து வைப்பார். [க]

## சைக்கிள்களுக்கு உருமத்தகடு பெற கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 8

உள்ளூராட்சி மன்றுகளினால் விநியோகிக்கப்படும் துவிச்சக்கரவண்டிகளுக்கான (சைக்கிள்களுக்கான) உருமத்தகடுகளை கொண்டிராத துவிச்சக்கரவண்டிகளை வீதிகளில் அனுமதிப்பது தொடர்பான உள்ளூராட்சி மன்றுகளின் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்குவதற்கு தமிழீழ நிர்வாக சேவை தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 1ஆம் திகதிக்கு முன்பாக துவிச்சக்கரவண்டி பாவனையாளர்கள் அனைவரும் உருமத்தகடுகளை பெற்றுக் கொள்வதன் மூலம் உள்ளூராட்சி மன்றுகளிற்கு ஒத்துழைப்பு நல்குமாறும், உருமத்தகடுகளின்றி எதிர் நோக்க வேண்டிய வீண் சிரமங்களில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளுமாறும் தமிழீழ நிர்வாக சேவை பொது மக்களைக் கேட்டுக்கொள்கின்றது. (ற)

---

**SPOKEN ENGLISH**
by
**Mr. Britto**

ஆரம்பம்:
09-06-1995
4-00 pm.

**SCIENCE COLLEGE**
பெருமாள் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/1454)

---

## கிழக்கே துருப்புகளை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைத் திட்டம் ஒன்றைப் பற்றி ஆக் கூட்டத்தில் ஆராயப்பட்டது

லேணல் அநுருத்த ரத்வத்தையே இத் திட்டத்தை முன் வைத்தார்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து துருப்புக்களின் ஒரு பகுதியை வடக்குக்கு நகர்த்தும் ரத்வத்தையின் அந்தத் திட்டத்தை கேட்டதும் ஸ்ரீலங்கா படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட பல அதிகாரிகள் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தனர் என்று ''சண்டே ரைம்ஸின்'' பாதுகாப்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இது போன்ற ஒரு திட்டத்தையே காலஞ்சென்ற வட பிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் கொப்பேகடுவாவும் வைத்திருந்தார்.

அவர் கொல்லப்பட்டதோடு அவரது திட்டமும் செத்துப் போய்விட்டது.

இராணுவம் குவிந்துள்ள களமாக வடக்கை மாற்றும் திட்டமே அது.

ஸ்ரீலங்காவின் ஆயுதப்படைகள் தற்போது செய்வறியாது திணறுவதோடு தங்களுக்கு ஏற்பட்டுள்ள நலிவையும் உணரத் தவறியுள்ளன எனவும் ''சண்டே ரைம்ஸின்'' பாதுகாப்பு செய்தியாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா ராணுவம் எதிர் காலத்தில் தாக்குதல் திட்டங்களை வகுக்க கிழக்கில் நெருக்கமாக துருப்புக்கள் இருக்க வேண்டும்.

பல படைமுகாம்களை காட்டுப் பிரதேசங்களில் அமைக்க வேண்டும்.

போர் இடை நிறுத்தம் முறிந்ததும் எந்த தடையும் இன்றி முகாம்களை புலிகள் கைப்பற்றினர்.

கிழக்கில் நிலப் பகுதிகளை கைப்பற்ற முயற்சிக்கும் போது பலத்த இழப்புக்களையும், கால விரயத்தையும் ஸ்ரீலங்கா படையினர் எப்போதும் சந்திக்கின்றனர்.

கடந்தவாரம் இடம் பெற்ற சம்பவங்கள் இதற்கு உதாரணங்களாக இருக்கின்றன.

பாதுகாப்பு படைகள் தங்களிடம் சிறந்த சிப்பாய்களும் அதிகாரிகளும் இருப்பதாக புளுகிக் கொள்ளலாம். ஆனால் குறைபாடு உள்ள திட்டங்களால் இழப்புக்கள் தொடர்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் துருப்புக்கள் நிறைக்கப்படுவது சிங்களக் குடியேற்றங்களை பாதுகாக்க அவசியம்.

கடந்த காலங்களில் கிழக்கில் குடியேற்றங்களை மட்டுமல்ல இராணுவத்தினரால் தம்மைத்தாமே பாதுகாக்க முடியாமல் போய் விட்டது.

— இவ்வாறு ''சண்டே ரைம்ஸின்'' பாதுகாப்புச் செய்தியாளர் மேலும் தெரிவித்துள்ளார். [ஐ-3]

## யுத்தத்தில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புத்திஜீவி அரசியல்வாதிகள் இணங்குவார்கள் என நம்புகிறேன்.

எனவே, இந்த நாட்டில் சமாதானம் ஏற்படும் வரை தற்காலிகமாகவாவது புதிய அரசமைப்பை அறிமுகம் செய்வதை இடைநிறுத்த வேண்டும்.

மனிதாபிமானமற்ற யுத்தம் ஒன்றினால் சொல்லொணா துன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கும் இத்தருணத்தில்—இந்த நாட்டுக்கு ஒரு அரசமைப்பு மாற்றம் அவசியமில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசு தனது கட்டுப்பாட்டை உண்டாக்குவதே இன்றைய தேவையாகும்.

அரசு இச்சமயத்தில், விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்காக தனது முழுப்பலத்தையும் ஈடுபடுத்த வேண்டும்.

யுத்தத்தில் வெற்றிபெற்று சமாதானம் மீளக் கொண்டு வரப்பட்ட பின்புதான், அரசமைப்பு சீர்திருத்தம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-5)

## முக்கிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடிமருந்துடன் கூடிய வாகனம் திங்கட்கிழமை இரவு 8.15க்கும் 8 30க்கும் இடையில் வாகனத்தரிப்பிடத்துக்குச் சென்றதாக தெரிய வந்தது.

அதன் பின் குண்டு வெடிப்பு இடம் பெறுவதற்கு அரை மணித்தியாலங்களுக்கு முன், இரண்டு பேர், சம்பந்தப்பட்ட வாகனத்தில் இருந்து வெளியேறினர்.

இதேசமயம் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் நேற்று விசாரணைகளை நடத்த இருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கண்டறிவதில் சகல வழிகளிலும் கவனம் செலுத்தப்படும் என்று பொலீஸ் தலைமையகம் தெரிவித்தது.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டிருக்கக் கூடிய குறைபாடுகள் பற்றியும் ஆராயப்பட உள்ளது.

சந்தேக நபர்களை பிடிக்கும் பொருட்டு சில பொலீஸ் பகுதிகள் தேடுதல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன.

இதற்கிடையில் விமான நிலையவாகன தரிப்பிடத்துள் பிரவேசிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களை இட்டு வாகன தரிப்பிடத்தை வேறு பகுதிக்கு மாற்றுவதான திட்டம் ஒன்றும் ஆராயப்பட்டுள்ளது. (ஐ-5)

---

வதந்தி ''நெருப்பினை'' வைப்பான்
விலாங்காக வழுக்குவான்
...
உற்றுக் கவனியுங்கள்.

## காலி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இனவன் செயலை அடுத்து தமிழர்கள் பலர் இடம் பெயர்ந்து கோயில்களில் தங்கியுள்ளனர்.

கோயில்களில் தங்கி உள்ள அகதிகள் இன்னும் ஒரு வார காலத்துக்குள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர் என்றும் —

அத்துடன் அவர்களுக்கு ஒரு மாத காலத்துக்கு நட்ட ஈடு வழங்கப்படும் என்றும் மேல் மாகாண ஆளுநர் நெவில்கனகரட்ண தெரிவித்தார். (ஐ-3-6)

## ''சீ-டான்ஸ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நண்பகல் இவர்கள் 11பேரும்காங்கேசன்துறையில் இருந்து கடற்படையினரால் வள்ளம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டு காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வெளியே 5 மைல் தொலைவில் தரித்து நின்ற ''லங்கா கல்யாணி'' கப்பலில் ஏற்றப்பட்டனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இவர்களைப் பொறுப்பேற்றனர்.

பின்னர் இவர்களை ஏற்றிக்கொண்டு 'லங்கா கல்யாணி' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

அங்கு வைத்து இவர்கள் 11 பேரும் இறக்கப்பட்டு அங்குள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பணிமனையில் தங்கவைக்கப்பட்டனர்.

''லங்கா கல்யாணி'' கப்பலில் எஞ்சியிருந்த பொருள்கள் இறக்கப்பட்ட பின்னர் மீண்டும் இவர்கள் கப்பலில் ஏற்றப்பட்டனர்.

இவர்களை ஏற்றிக்கொண்டு அந்தக் கப்பல் பருத்தித்துறையில் இருந்து நேற்று மாலை நேரடியாக திருமலைக்குப் புறப்பட்டுச் சென்றது.

சீ-டான்ஸர் கண்ணியில் சிக்கிய சம்பவத்தில் அதிலிருந்த சிப்பந்தி ஒருவர் காணாமல் போய்விட்டார். இருவர் காயமடைந்துள்ளனர். (ஐ-3-4-173)

## வடக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை.

தொடர்புகள் எதுவும் இன்றி படையினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தங்கள் உறவினர்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பது படையினரின் மனநிலையை வெகுவாகப் பாதித்துள்ளது.

வடக்கில் பணிபுரியும் படையினருக்கு தென்னிலங்கையில் உள்ள அவர்களது உறவினர்கள் அனுப்பும் கடிதங்கள், மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் என்பன கடந்த பல வாரங்களாக அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இவ்வாறான கடிதங்கள் மற்றும் பொருள்கள் முன்னர் விமானம் மூலம் வடக்கே அனுப்பப்பட்டு வந்தன.

விமான சேவை தடைப்பட்டதை அடுத்து படையினருக்கான உறவினரின் கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள் அடங்கிய பல பொதிகள் வவுனியாவில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6)

## ''நரோமா''...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை ஏற்றிக்கொண்டு கடற்படையினரின் சோதனைக்காக காங்கேசன்துறை துறைமுகத்துக்கு செல்வது தற்போது சாத்தியம் அற்றதாக இருப்பதாலும்—

''நரோமா'' கப்பலின் சேவையை தொடர்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

இக்கப்பல் இன்று திருகோணமலையில் இருந்து புறப்பட்டு நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி இன்று இந்த சேவை நடைபெறுமா, இல்லையா என்பது குறித்து நேற்றிரவு வரை யாழ்ப்பாணத்துக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (ஐ 3-4)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 8

இணுவில் மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள கண்காட்சி நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும் இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. க. சந்தசாமி கலந்து கொள்வர்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். இரத்தினராஜா, உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (க)

---

உ

கோண்டாவில் கிழக்கு

## ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தானம்

### கைலாய வாகனத் திருவிழா

08-06-95 இரவு 07 மணி

7ஆம் திருவிழா மாலை நிகழ்ச்சிகள்

மேளக்கச்சேரி:- சுவாமிநாதன் குழுவினர்
V. K. கானமூர்த்தி
V. K. பஞ்சமூர்த்தி குழுவினர்
T. உதயசங்கர் குழுவினர்

சின்னமணி குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சி

சுகுமார் இசைக் குழுவின் இன்னிசை கானங்கள்

ஒலியமைப்பு - றோயல் சவுண்ட்ஸ்
ஒளியமைப்பு - மனோலைட்

7ஆம் திருவிழா உபயகாரர்

(36986)

---

பாடசாலை மட்டத்திலான

## ''சாளரம்'' நடத்தும் போட்டிகள் 1995

மாணவர்க்கான
கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகள்

முடிவுத் திகதி: 10 — 06 — 95

வினாடி வினாப் போட்டி திறந்த போட்டியாக அமையும். ஐந்து மாணவர்களின் பெயரை 10-6-95 இற்கு முன் கோட்டங்களுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும், கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்படும்.

சாளரம் வெளியீட்டகம்
இல. 2, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(36984)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
13 — 03 — 1930

மறைவு:
20 — 05 — 1994

### அமரர் செல்லப்பா நல்லையா

[கமலா ஸ்ருடியோ உரிமையாளர், கிளிநொச்சி]

திதி: 08 — 06 — 1995

எங்கள் அன்புத் தெய்வமே! அணையாத தீபமே, — அன்பு அப்பா!
உங்களை எண்ணும் போது உள்ளம் நெருப்பாக — எரிகிறதே
உங்கள் நிழற்படங்கள் எங்கள் உயிரைத் துடிக்க — வைக்கின்றனவே
உங்களைப் போல் உற்றதுணை இவ்வையகத்துள் — கிட்டுமோ,
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம் — நெஞ்சை விட்டு அகலாதப்பா
உங்கள் பிரிவால் துயருறும்;

— குடும்பத்தினர்.

8A, கலட்டி அம்மன் வீதி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். [36979]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08 - 06 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org